[2014 ஆகஸ்ட் 12

415—

கால்நடைக் கிளை நிலையம்

***37515—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பரந்தூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பரந்தூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், கொடி கட்டிய தொண்டனையும் அரசாங்கக் கொடி போட்ட காரிலே செல்ல வைத்து அழகு பார்க்கின்ற, அகில இந்தியாவின் ஒரே தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் இனத்தின் உரிமைக்குக் குரல் கொடுத்து, தமிழர்களின் நலன் காக்கும் தமிழர் குலச் சாமி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட பரந்தூர் கிராமத்தில் வாழும் மக்களும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களும் விவசாயத் தொழிலையே முதன்மைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். அவர்கள் உப தொழிலாகக் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். அவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு மருத்துவம் செய்வதற்கு வசதியாகவும், அவர்களுடைய நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையிலும் பரந்தூர் கிராமத்தில்

கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு 2-ஜியில் கொள்ளையடித்த 1,76,000 கோடி ரூபாய் பணத்தை எப்படிப் பாதுகாப்பது, இந்த ஊழலிலிருந்து கனிமொழியை எப்படிக் காப்பாற்றுவது என்ற எண்ணத்திலே இருந்தார்களே தவிர, மக்களைப் பற்றி கவலைப்படாதவர்கள், கால்நடைகளைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவாட்டிலிருந்துகூட இரத்தம் வருவதைப் பார்த்துவிடலாம். ஆனால், கருணாநிதியிடமிருந்து கருணையை எப்பொழுதுமே எதிர்பார்க்க முடியாது என்பதற்கு இது ஒரு சான்று என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரந்தூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மகிழ்ச்சியான செய்திக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 416, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

416—

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

***28549—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—